Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 123

வியாழக்கிழமை
28 மார்ச் 2024

பங்குனி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## முச்சந்தி முரளி




"பாலங்களைக்
கட்டியாவது
பாவங்களைக் கழுவ
நினைக்கினமோ?"



# வடக்கில் மீண்டும் போர்? எல்லாம் தெற்கின் மாயை!

### கனடாவில் கூறிய அநுர

கொழும்பு, மார்ச் 28
வடக்கில் மீண்டுமொரு போர் ஏற்படாது, புலிகள் மீண்டெழுவார்கள் என தெற்கில் மாயை உருவாக்கப்படுகின்றது. அதற்கான எந்தச் சாத்தியமும் இல்லை - இவ்வாறு கனடாவுக்குச் சென்றுள்ள அநுர குமார திஸாநாயக்க அங்குள்ள இலங்கை மக்களுடனான சந்திப்பொன்றில் தெரிவித் 11



## மைத்திரிக்கு ஆப்பு 'ரெடி'!

கொழும்பு, மார்ச் 28
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான தகுந்த ஆதாரங்கள் உள்ளன என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரி 11

## வடக்குப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியதே

### தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28
வடக்கில் அரசியல் பிரச்சினை, மக்கள் பிரச்சினை என இரு பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்படவேண்டும். மாகாணசபை முறைமை ஊடாகத் தமது அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்று தமிழ் மக்கள் கருதும் பட்சத்தில் அந்த வியூகம் 11

# இந்தியாவுக்குப் பாலம் பேச்சு இன்று ஆரம்பம்

**கொழும்பு, மார்ச் 28**

**இலங்கையையும், இந்தியாவையும் இணைக்கும் பாலத்தை அமைப்பது தொடர்பான பேச்சுகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.** 11

## மைத்திரியை விரட்டுங்கள்!

### பொங்குகின்றார் மேர்வின்

கொழும்பு, மார்ச் 28
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை விரட்டுங்கள் என்று அந்தக்கட்சி உறுப்பினர்களிடம் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். 11

## இளைப்பாறிய முதியவரை மோதிக்கொன்ற வாகனம்!

### புன்னாலைக்கட்டுவனில் சோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
புன்னாலைக்கட்டுவன் வடக்கில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.
புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சீனியன் இராசா (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார். 11







முல்லை. சுகாதார சேவைகள் பணிப்பாளர்

## மருத்துவர் அகிலேந்திரன் டிப்பர் மோதி உயிரிழப்பு!

வவுனியா, மார்ச் 28
முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரசேவைகள் பணிப்பாளரும், வவுனியா பொது மருத்துவமனையின் முன்னாள் பணிப்பாளருமான மருத்துவர் கு.அகிலேந்திரன் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று வவுனியா - ஓமந்தை, கள்ளிக்குளம் சந்திக்கு அருகில் நடந்துள்ளது. 11



## முன்னாள் போராளி கொழும்பில் கைது!

### புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டாராம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்பாட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் போராளி ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியாவைச் சேர்ந்த செ.அரவிந்தன் என்ற முன்னாள் போராளியே கைது செய்யப்பட்டவராவார். இவர் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகவும் 11

## 3 ஆயிரம் டொலருக்காக மூச்சை விடவும் தயார்!

### உக்ரைன் – ரஷ்யா போரில் இலங்கையர்கள்!

கொழும்பு, மார்ச் 28
உக்ரைன் - ரஷ்யப் போரில் இரு தரப்புகளிலும் இலங்கையர்கள் ஆயுதமேந்தி மோதல்களில் ஈடுபட்டுள்ளனர் என்று சர்வதேச ஊடகமான 'அல்ஜெசீரா' செய்தி வெளியிட்டுள்ளது.
இலங்கையில் உள்நாட்டில் காணப்படும் கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக பல 11

## மசாஜ் நிலைய பெண்கள் இருவருக்கு 'எய்ட்ஸ்'

கொழும்பு, மார்ச் 28
நீர்கொழும்பில் சட்டவிரோதமாக இயங்கி வந்த 53 உடற்பிடிப்பு நிலையங்களில் (மசாஜ்) மேற்கொள்ளப்பட்ட 11

## பஸிலின் பதவியில் நாமல்

கொழும்பு, மார்ச் 28
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி நாடாளுமன்ற உறுப்பினரும், மஹிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்சவிடம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைதராபாத் சிக்ஸர் மழை சுருண்டது மும்பை அணி!

ஐ.பி.எல். ரி–20 கிரிக்கெட் தொடரில் நேற்றைய ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் மும்பை இந்தியன்ஸ் அணியை 31 ஓட்டங்களால் வீழ்த்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் 3 விக்கெட்டுகளை இழந்து 277 ஓட்டங்களை விளாசியது. ஐ.பி.எல். வரலாற்றில் இதுவே அணி ஒன்றின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் வீரர்கள் 18 சிக்சர்கள் விளாசி மிரட்டினர்.

ஹைதராபாத்தில் உள்ள ராஜீவ்காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

ஹைதராபாத்துக்கு மயங்க் அகர்வால் – ட்ராவிஸ் ஹெட் இணை தொடக்கம் கொடுத்தது. தொடக்கத்திலேயே அதிரடி காட்டிய இந்த இணையை 5ஆவது ஓவரில் ஹர்திக் பாண்டியா பிரித்தார். மயங்க் அகர்வால் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அபிஷேக் சர்மா ட்ராவிஸ் ஹெட்டுடன் கைகோத்தார். 18 பந்துகளில் அரைசதம் கடந்து, ஹைதராபாத் அணியின் அதிவேகமாக அரைசதம் கடந்தவர் என்ற பெருமையை பெற்றார் ட்ராவிஸ் ஹெட். 24 பந்துகளில் 62 ஓட்டங்களைக் குவித்துவிட்டுச் சென்றார் ஹெட்.

அபிஷேக் சர்மா 7 சிக்சர்கள் அடித்து வான வேடிக்கை காட்டினார். 16 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்தார். முன்னதாக ட்ராவிஸ் ஹெட் செய்த சாதனையை இதே ஆட்டத்தில் முறியடித்து, ஹைதராபாத்தின் அதிவேக அரைசதத்துக்கு சொந்தக்காரரானார் அபிஷேக் சர்மா.

ஒருவழியாக பியூஸ் சாவ்லா வீசிய 11ஆவது ஓவரில் பிடி கொடுத்து ஆட்டமிழந்து 63 ஓட்டங்களுடன் வெளியேறினார் அபிஷேக் சர்மா.

அடுத்து எய்டன் மார்க்ரம் ஹென்ரிச் கிளாசென் இணைப் பாட்டம் அமைத்தனர். ஹென்ரிச் கிளாசென் மட்டும் 7 சிக்சர்கள் அடித்து மும்பை அணியைத் திணறடித்தார். 18 ஓவர் முடிவில் ஹைதராபாத் 3 விக்கெட் இழப்புக்கு 243 ஓட்டங்களைச் சேர்த்தது. ஹென்ரிச் கிளாசென் 34 பந்துகளில் 80 ஓட்டங்களை விளாசி மிரள வைக்க, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த ஹைதராபாத் 277 ஓட்டங்களைக் குவித்தது.


2013ஆம் ஆண்டு புனே வாரியர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்.சி.பி. அணி 263 ஓட்டங்களை எடுத்திருந்ததே ஐ.பி.எல். தொடரின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது. தற்போது அதை முறியடித்து புதிய சாதனையை படைத்துள்ளது ஹைதராபாத்.

278 என்ற இமாலய இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணி ஆரம்பத்தில் அதிரடி காட்டியது.

ரோகித் சர்மா மற்றும் இசான் கிஷான் சிறப்பாக விளையாடினாலும் அடுத்தடுத்து விக்கெட்டைப் பறிகொடுத்தது மும்பை இந்தியன்ஸ். ரோஹித் சர்மா 12 பந்துகளில் 26 ஓட்டங்களுடனும், இசான் கிஷான் 13 பந்துகளில் 34 ஓட்டங்களுடனும் வெளியேறினர். அதன்பின்னர் நமன் திர் மற்றும் திலக் வர்மா அதிரடியாக விளையாடி மும்பை ரசிகர்களுக்கு நம்பிக்கை கொடுத்தனர். அவர்களின் அதிரடியால் ஒரு சமயத்தில் மும்பை அணி இந்த போட்டியில் வெற்றி பெற்று விடுமோ என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் சரியான நேரத்தில் விக்கெட்டுகளைச் சாய்த்து சன்ரைசர்ஸ் அணி இந்த போட்டியை தன்பக்கம் திருப்பியது.

திலக் வர்மா 34 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்று பெவிலியன் திரும்பினார். நமன் திர் 14 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்றார். அதன்பின்னர் மும்பை இந்தியன் அணியின் ஓட்டவேகம் அடங்கியது.

இறுதியில் மும்பை அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சன்ரைசர்ஸ் அணி 31 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ–இ)





# சட்டத்தை நிலைநாட்டல் மனித உரிமை மீறலல்ல

## ஜனாதிபதி விளக்கம்

**கொழும்பு, மார்ச் 28**

**போராட்டம் என்ற போர்வையில் வன்முறையை விதைப்பவர்கள் மீது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

சட்டத்தையும் ஒழுங்கையும் மேற்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மனித உரிமை மீறல் என்றுவிட்டு, சில நடவடிக்கைகளை எடுக்காதிருந்தால் இன்று நாட்டில் உறுதித்தன்மையை ஏற்படுத்தியிருக்கமுடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாட்டுக்குப் புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. பரீட்சைச்சுமையைக் குறைத்து பாடசாலைக் கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. 2035 ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர் தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

கடினமான மற்றும் விரும்பத்தகாத யுகத்தின் பின்னர் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்லும் பயணத்தில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க இடமளிக்கக்கூடாது. ஒவ்வொரு துறையிலும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பு சகல தரப்பினருக்கும் உண்டு" என்றும் விரிவுரையாளர்களிடத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச–இ)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார். எனவே, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கிரிக்கெட் விளையாட்டில் நடுவர்களிடம் ஆட்டமிழப்பா? இல்லையா? என வீரர்கள் வினவலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. ஆனால் போட்டி விதிமுறைகளுக்கு அமையவே நடுவரின் தீர்ப்பு அமையும். அதுபோலவே முன்கூட்டியே பொதுத்தேர்தலை நடத்துமாறு சிலர் கோரலாம். எனினும், ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார். நாடு முன்னேறவேண்டுமெனில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறவேண்டும்.' - என்றார். (ம-44)

# மகளிர் தின நிகழ்வு

யாழ்., மார்ச் 28

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களின் சம்மேளனமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பரந்தன், குமரபுரம் பாடசாலை வீதியில் உள்ள தர்மம் நிலையத்தில் நடைபெறவுள்ளன. (எ–இ)

# மதுபான விற்பனை வருமானம் உயர்வு

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் மதுபான விற்பனை மூலம் 38.5 வீதமாக வருமானம் உயர்ந்துள்ளது என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச–இ)

# குடும்ப வன்முறைச்சட்டம்: விரைவில் திருத்தங்கள்!

கொழும்பு, மார்ச் 28

குடும்ப வன்முறைச்சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

புதிய சட்டமூலம் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைந்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய சட்ட வரைவைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பிக்குமாறு சட்ட ஆலோசகர் குழுவுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ம-6)

# 'எட்கா' எதிர்ப்புகளை கண்டுகொள்ளாதீர்கள்

## ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் அரசாங்கத்துக்கு அறிவுரை

ஐ.நா. அலுவலகம் முன்பாக போலி உண்ணாவிரதத்தை முன்னெடுத்த தரப்பே தற்போது 'எட்கா' உடன்படிக்கை தொடர்பிலும் கொக்கரிக்கின்றது. இந்த எதிர்ப்பைக் கண்டுகொள்ளாது உடன்படிக்கையை தொடர்ந்து நிறைவேற்றும் வகையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'எம்.சி.சி. உடன்படிக்கைக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். 8 வருடங்கள் பின்நோக்கிச் சென்றோம். தற்போது 'எட்கா' உடன்படிக்கை தொடர்பில் மக்களை ஏமாற்றுவதற்கு மாயையை உருவாக்கி வருகின்றனர். இன்னும் எத்தனை வருடங்கள் பின்நோக்கிச் செல்ல நேரிடுமோ தெரியவில்லை. ஐ.நா. அலுவலகம் முன் சென்றுபடுத்து, தலையணையின்கீழ் உணவு வைத்துக்கொண்டு போலி உண்ணாவிரதம் இருந்தவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். எனவே, போலி மாயைகளுக்கு ஏமாறுவதா என்பது தொடர்பில் மக்களே தீர்மானிக்கவேண்டும்' - என்றார். (ம-44)

# பண்டவரி நீக்கம்!

தற்போது நடைமுறையில் உள்ள விசேட பண்டவரி நீக்கப்படவுள்ளது. அமைச்சரவை இதற்கான அனுமதியை நிதியமைச்சரான ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. விசேட பண்டவரி மூலம் 64 வகையான பொருள்களுக்கு இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது. இது பல்வேறு சிக்கல்களை உருவாக்கியுள்ளது. இதையடுத்தே இந்த வரிநீக்கம் நடைமுறைக்கு வருகின்றது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 அடி குழாய்க்கிணறு நிலத்தடி நீருக்கு ஆபத்து

## ஒட்டுசுட்டான் விவசாயிகள் எதிர்ப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 28**

**ஒட்டிசுட்டானில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் அலுவலகக் காணிக்குள் 300 அடி ஆழம் கொண்ட குழாய்க் கிணறு அமைக்கப்படுவதால், அந்தப் பகுதி நிலத்தடி நீருக்கு ஆபத்து ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

ஒட்டுசுட்டான், சிவநகர், சம்மளங்குளம் போன்ற கிராமங்களில் வசிக்கும் குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றன. நிலக்கடலை, மிளகாய், பப்பாசித் தோட்டங்களுக்கு கிணற்று நீரையே நாம் பயன்படுத்துகின்றோம். இந்தநிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச குடிதண்ணீர்த் திட்டத்துக்காக ஒட்டுசுட்டான் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையால் 300 அடி ஆழத்தில் குழாய்க்கிணறு அமைக்கப்படுவதாகத் தெரியவருகின்றது. இந்தக் குழாய்க் கிணறால் எமது நிலத்தடி நீருக்கு ஆபத்து ஏற்படும். எனவே பொதுமக்களின் விருப்பத்துக்கு முரணாக நிலத்தடி நீரை உறிஞ்சும் இந்தச்செயற்பாட்டைத்தடுக்க அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-19)

### வலி.கிழக்கில்
## வாழைகளிலும் வெள்ளை ஈக்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 28

வலி.கிழக்குப் பிரதேசத்தில் வாழைகளிலும் வெள்ளை ஈக்களின் தாக்கம் பரவி வருகின்றது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் தென்னைமரங்களில் வெள்ளை ஈக்களின் தாக்கம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் தற்போது வாழைகளிலும் அவை பரவியுள்ளன. வாழை இலைகளில் வெள்ளை ஈக்களின் பச்சை நிறத்திலான எச்சம் அவதானிக்கப்பட்டுள்ளது. கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களிலேயே வெள்ளை ஈக்களின் தாக்கம் அதிகளவில் பதிவாகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-17)

## மரக்கறி விலை: சடுதியாகச் சரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் நேற்றைய நிலைவரத்தின் அடிப்படையில், ஒருகிலோ தக்காளியின் விலை 60 ரூபா வரை சரிவடைந்து காணப்பட்டது.

திருநெல்வேலிச் சந்தையில் நேற்றைய நிலைவரப்படி, கத்தரிக்காய் கிலோ 150 ரூபாவுக்கும், பயற்றங்காய் கிலோ 160 ரூபாவுக்கும், பாகற்காய் கிலோ 240 ரூபாவுக்கும், கரட் கிலோ 200 ரூபாவுக்கும், பூசணிக்காய் கிலோ 160 ரூபாவுக்கும், கோவா கிலோ 200 ரூபாவுக்கும், பச்சைமிளகாய் கிலோ 180 ரூபாவுக்கும், சின்னவெங்காயம் கிலோ 220 ரூபாவுக்கும், கீரை ஒருபிடி 60 ரூபாவரையிலும் விற்பனை செய்யப்பட்டன. (ச-17)

## கைமாற்றப்படும் நெடுஞ்சாலை நிர்வாகம்

கொழும்பு, மார்ச் 28

வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்த அதிவேக நெடுஞ்சாலை நிர்வாகம் ஏப்ரல் முதலாம் திகதி முதல் சஹஸ்ய முதலீட்டு நிறுவனம் என்ற அரச நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ச-6)

## யாழ். நகரில் கடும் மழை!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று நண்பகல் இடியுடன் மழை கொட்டித் தீர்த்தது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகக் கடும் வறட்சியுடனான காலநிலையே நிலவியது. இவ்வாண்டு மார்ச் மாதம்வரை போதுமான மழை கிடைக்காததால் குடாநாட்டின் தண்ணீர் இருப்புத் தொடர்பில் அச்சமான நிலையே காணப்பட்டது. கடும் மழையொன்று தேவையென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நேற்று நண்பகல் சுமார் ஒரு மணிநேரம் இடியுடன்கூடிய மழை கொட்டித் தீர்த்தது. (ம-17)

## காணிகளை விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

போர் முடிந்து பல வருடங்கள் கடந்தும் தங்கள் காணிகளைத் தங்களுக்கு மீண்டும் கையளிக்கும்படி போராடிவரும் வலி.வடக்கு மக்கள், தமது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதிக்குக் கோரிக்கைக் கடிதம் அனுப்பிவைத்துள்ளனர்.

'மெசிடோ' சமூக மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் வழிகாட்டலில், பலாலி மற்றும் தெல்லிப்பழைப் பகுதி மக்கள் மாவிட்டபுரம் பொதுமண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை ஒன்றுகூடித் தங்கள் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி, ஜனாதிபதிக்குத் தபால் அட்டை மூலம் கோரிக்கையை அவர்கள் அனுப்பிவைத்தனர். (ப-60)



## தினம் தெரியுமோ?

**'பஞ்சி பிடிச்ச கழுதை படுத்துறங்கப் பஞ்சணை கேட்டிச்சாம்' எண்டு பழைய ஆக்கள் சொல்லுவினம். இப்ப என்னெண்டால் அப்பிடி பஞ்சி பிடிச்சு, வேலைவெட்டி செய்யாமல் ஏய்க்கிறவை தங்களை ஆரும் மேய்க்க வெளிக்கிட்டால் உடன "எனக்கு அவர் பேசினதால மன உளைச்சல், அதால தற்கொலை செய்யப்போறன்" எண்ட கணக்கில மேலிடங்களுக்கு மொட்டைக் கடிதம் எழுதிற காலமாப் போட்டுது.**

**கிட்டடியில ஒரு அரசாங்க உத்தியோகத்தர், தன்னைத் தற்கொலை செய்யிற அளவுக்கு மனவுளைச்சலை உண்டாக்கிறார் எண்டொரு கடிதத்தை இணையங்களில வெளியிட்டவர். அப்பிடி ஒரு உத்தியோகத்தரை தற்கொலை செய்யத் தூண்டுற அளவுக்கு அப்பிடி என்ன ஆய்க்கினை குடுத்திருப்பினம் எண்டு பட்சி உள்ளுக்க நுழைஞ்சு துழாவிப் பாக்கத்தான் உண்மை என்னெண்டு வெளியில வந்தது.**

வலி.மேற்குப் பிரதேசசபையில 'வேலை செய்யிற'தாச் சொல்லிக்கொள்ளுற அந்த அரசாங்க உத்தியோகத்தர் குறும்படங்களில நடிக்கிற ஒருத்தர். அதால ஆள் விடிய வேலைக்கு வந்திட்டு, கொஞ்ச நேரத்தில எஸ்கேப் ஆகிடுவார். பிறகு அடுத்தநாள் தான் ஒப்பிஸுக்கு வந்து முதல்நாள் பின்னேரம் வைக்க வேண்டிய சைனை வைப்பார். பிங்கர் பிரிண்ட் மிஷின் இருந்தும் அதில காலைமை மட்டும் கையைக் குடுப்பாராம். பின்னேரம் கையைக் குடுத்தா பகலே எஸ்கேப் ஆனது தெரிஞ்சிடும் எண்டதால, பின்னேரம் அவர் பிங்கர் வைக்கிறேலையாம். சந்தையில விவசாயியளிட்ட பத்து வீதம் கழிச்சுக் கொண்டு சாமானை வாங்கிற அநியாயத்தைத் தடுக்கிற குழுவில இவரையும் போட்டது. ஆனால் ஆள் ஒருநாளும் சந்தைப்பக்கம் எட்டியும் பாக்கேலை. இதால ஆளை சங்கானை சப்ஒப்பீஸில இருந்து சுழிபுரம் சப்ஒப்பீஸுக்கு மாத்தியிருக்கினம். அங்க போயும் அவர் பெரும் அலப்பறை.

முதல்அலப்பறைமேசையிலதொடங்கியிருக்கு. தனக்கு மற்றவையை விட பெரிய மேசையும், சுழல் கதிரையும் வேணும் எண்டு அடம்பிடிச்சிருக்கிறார். ஆனால் எல்லாரையும் மாதிரியே அவருக்கும் மேசை, கதிரை குடுக்கச் சொல்ல ஆளுக்கு கடுப்பு. அந்தக் கடுப்பிலயோ, பஞ்சிக்குணத்திலயோ ஆள் கடையளில போய் வரி அறவிடுற வேலையைச் செய்யாமல் ஒப்பீஸையே கட்டிப்பிடிச்சுக்கொண்டு இருந்திருக்கிறார். அதால கனக்க வேலையள் நிலுவையில வந்திருக்கு. அதை ஒவ்வொரு திங்கட்கிழமையும் நடக்கிற ஒப்பீஸ் கூட்டத்தில "ஏன் வேலை செய்யேலை? ஏன் பெண்டிங் பைல் கூடுது?" எண்டு கேட்டிருக்கினம். அதைவிட கூட்டத்துக்கும் பிந்திப் போயிருக்கிறார், அதுக்கும் "கூட்டமெண்டா பிந்தக் கூடாது, 9 மணிக்கு நிக்கோணும்" எண்டு மேலதிகாரி சொல்லியிருக்கிறார். "ஏன் வேலை செய்யேலை? ஏன் பிந்தினது?" எண்ட இந்த ரண்டு கேள்வியும் தான் அந்த வெட்டி ஒப்பீஸருக்கு தற்கொலை செய்யிற அளவுக்கு மன உளைச்சலைக் கொண்டந்திருக்காம். மாடுமாதிரி வேலை செய்யிறவை இப்பிடி வேலை செய்தும் பேச்சு விழுகுதே எண்டு கவலைப்பட்டால் ஒரு நியாயம் இருக்கு. ஆனால் வேலையும் செய்யாமல், சுழல் கதிரையும் கேட்டுக்கொண்டிருந்தவருக்கு, பிந்தி வரக்கூடாது எண்டு சொன்னால் அது பெரிய அவமானம் எண்டால் பாருங்கோவன்.

**உவர் இந்த ஒப்பீஸில மட்டுமில்லை, இதுக்கு முதல் வலி.வடக்கு, வலி. தென்மேற்குப் பிரதேசசபையளிலையும் இவரின்ர வேலையின்ர வித்துவத்தால தான் அங்கையிருந்து இடமாற்றம் குடுத்து "நீ போனால் காணும் சாமி" எண்டு அனுப்பினவையாம். அந்தளவு அவருக்கு வேலைக்குப்பஞ்சி, ஆனால் வில்லங்கத்துக்கு பஞ்சமில்லையாம்.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



கடந்த (08.04.2023) சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் முருகேசு அப்புத்துரை

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவசக்கிரியைகள் இன்று 28.03.2024 வியாழக்கிழமை மதியம் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மாகியப்பிட்டி சந்தி,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்
021 224 1103

(CS 28326) 1-1

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
01 . 10 . 1927



ஆண்டவன் அடியில்
27 . 03 . 2024

## சுப்பிரமணியம் நல்லம்மா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நல்லம்மா அவர்கள் நேற்று (27.03.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற குகானந்தன், காலஞ்சென்ற குகவதனா, குகரதி (ஆசிரியர் யாழ் விக்ரோறியா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் பாசமிகு சகோதரியும், அகிலாண்டேஸ்வரி (மாலா கனடா), காலஞ்சென்ற தனபாலன், சசிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுதர்சனின் (வளவாளர், யாழ் கணினி வள நிலையம்) பாசமிகு அம்மம்மாவும், தனுஷாவின் (கனடா) பாசமிகு அப்பம்மாவும், ரவி சங்கர் (கனடா), நிஷாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் மாவட்ட செயலகம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷரா, அர்விந், அஸ்விகா, ஆட்ஜா (கனடா), ஆதித்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (28.03.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அராலி மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS) S-1

# தந்தை செல்வா விருது பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால், தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 31ஆம் திகதி வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில்,தந்தை செல்வா விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. இ.அ.தேவராஜன், க.நாகராஜா, வணபிதா பசுபதி தேவமித்திரன், ச.பாலரூபன், தி.உதயசூரியன், இ.சிவகுமார், ப.சரோஜினிதேவி, எஸ்.ஹரிகரன், சி.திருபரன், செ.பிரதாப், ஏ.ஏகாம்பரநாதன், த.ரஞ்சன், கலைவாணி, வி.கஜீபன், ஆ.காந்தநேசன், ஜெ.ற.றஜீபன், க.கம்சன், ஏ.ரவிவர்மா, ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் கண்பரிசோதனை செய்த 200 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன், 100 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும்,தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தின் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபர் வரதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

# உள்ளூராட்சி மாத நிகழ்வு

சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி மாத நிகழ்வு, சாவகச்சேரிப் பிரதேச சபையின் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் கொடிகாமம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள நட்சத்திரமஹால் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்துகொள்ளவுள்ளனர். (ட-159)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இதுவரை இழுபறியாக இருந்த காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும். செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். உடல் அசதி உண்டாகும் . மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**இடபம்:** தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சிவபெருமானை வழிபட விருப்பங்கள் நிறைவேறும். வாக்குவாதம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**மிதுனம்:** சிலருக்கு எதிர்பாராத திடீர் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் அதிகரித்துக் காணப்படும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். ஆதாயம் உண்டாகும். துர்கை வழிபாடு காரிய வெற்றி தரும்.வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** பண உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பெருமை உண்டாகும். முருகப்பெருமானை வழிபட அதிக நன்மைகளைப் பெறலாம்.வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். பல வகைகளிலும் அனுகூலப் பலன்கள் ஏற்படும்.

**கன்னி:** சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. மகாலட்சுமியை வழிபடுவதன் மூலம் பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அலைச்சல் ஏற்படலாம். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் பணஉதவி கேட்டு வருவார்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். வைரவரை வழிபடுவது நன்று. மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். சகோதரர்களால் அனுகூலம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# பாலியலுக்கு ஒரு கல்விமுறை

வடக்கில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வன்புணர்வுகளில் அநேகமானவை சிறுமிகளின் சம்மதத்துடன்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற அதிர்ச்சித் தகவல் வெளிவந்திருக்கின்றது. 18 வயதுக்குக் கீழ் உள்ள சிறுமியை அவரின் சம்மதத்துடன் புணர்ந்தாலும் அது வன்புணர்வுதான். பாரதூரமான குற்றம்தான். அது, சட்டத்தின் இரும்புக் கரங்களால் அணுகப்படவேண்டிய விடயமே. ஆனால், இந்தச் செய்தி வெளிப்படுத்தியிருக்கும் தகவல் மிகக் கனதியானதும் ஆபத்தானதுமாகும். பாலியல் தொடர்பான குறைந்த பட்சப்புரிதலும்-தெளிவும்-அறிவும் அற்றவர்களாகவே வடக்கின் சிறுவர், சிறுமிகள் வளர்த்தெடுக்கப்படுகின்றனர் என்ற விடயத்தைத்தான் மேற்படி செய்தி கட்டியம் செய்திருக்கின்றது.

பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் விழிப்புணர்வுக் கல்வியை வழங்கும் 'செயற்பாட்டு நடவடிக்கைகளில்' இறங்கவுள்ளதாக அரசாங்கம் கடந்த வருடம் அறிவித்திருந்தது. சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் நன்நடத்தைத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் நபர்களை குழுவாக ஒருங்கிணைத்து இந்த நடவடிக்கைகளை நிறுவனமயப்படுத்தி முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அப்படியெனில் இந்தத் திட்டத்தின் செல்நெறியையும், தோல்வியையும்தான், மேற்படி தகவல்கள் கட்டியம் செய்கின்றன.பாலியல் துஷ்பிரயோகங்களும், துர்நடத்தைகளும், கலாசார சீரழிவுகளும் மலிந்த பூமியாக தமிழர் தாயகப்பரப்பு தற்போது மாறிக் கொண்டிருக்கின்றது. சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களற்ற ஒரு முழுநாளைக் காண்பதே இப்போது குதிரைக்கொம்பு நிலைதான். பதின்மத்தைத் தொடாத பாலகர்கள்கூட பாலியல் இச்சைக்கு இரையாக்கப்படும் பின்னணியில், பாலியல் தொடர்பான அறிவூட்டலை பாடசாலைக் கல்வியூடாக எம் குழந்தைகளுக்கு வழங்கவேண்டியது தற்காலத்தில் தவிர்க்கமுடியாததாகும். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற வளர் நாடுகளிலும் இந்தக் கல்வி என்றோ செயலுருப் பெற்றுள்ளது. தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் பாலியல் விழிப்புணர்வுக் கல்வியில் அண்மைக்காலமாக முழு வீச்சில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், இலங்கையோ நவநாகரிகக் கல்வித் திட்டத்தில் தொலைதூரத்தில் உருண்டு புரண்டுகொண்டிருக்கின்றது.

ஒரு குழந்தை அதன் ஐந்து வயது வரைக்கும், பெற்றோரினதும் உற்றோரினதும் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும்தான் கூடுதலான நேரங்களைச் செலவிடுகின்றது. பாடசாலைக்காகப் புறப்பட்ட பின்னர் மூன்றாம் தரப்பு நபர்களுடனான பழக்கத்தை உருவாக்கவேண்டிய கட்டாயமும் தவிர்க்கமுடியாத்தனமும் அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. இதனால் பள்ளிப்பருவத்தின் ஆரம்ப நாள்களிலேயே அந்தக் குழந்தைக்கு நல்ல தொடுகை தொடர்பிலும் தவறான தொடுகை தொடர்பிலும் முடியுமான வரையிலான தெளிவூட்டல்களை, விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும். அதற்காக, இதுவரை இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இல்லாமல் இருந்தன என்றோ அல்லது சிந்தனை வறட்சி மிக்கதாக இருந்தன என்றோ பொருளல்ல. பேச்சு வழக்கில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும், பாடசாலைக் கற்றல் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. இந்த இரண்டாம்நிலை நடவடிக்கைகள் மிக இலகுவாக மாணவர்களைச் சென்றடைய வல்லவை. அவற்றைச் செய்ய உரியவர்கள் மனம்வைப்பார்களா?





# தேர்தலை ஒத்திவைத்தால் மக்கள் போர் வெடிக்கும்!

## தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 28**

**கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு மக்கள் போராட்டம் வெடிக்கும் என்பதால் தேர்தலை ஒத்திவைப்பதற்குரிய முயற்சி எதுவும் இடம்பெறாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவேமுடியாது. அதனைச் செய்வதாயின் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். அதற்கு உயர்நீதிமன்றத்தின் அனுமதி அவசியம். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப்பலம்தேவை. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இதற்கிடையில் அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் மக்கள் வன்முறையற்ற அமைதிப் போராட்டத்தில் இறங்குவார்கள். நானும் முதலில் சட்டத்தை நாடுவேன். அதன்பின்னர் போராட்டம் செய்வேன். எனவே, அப்படியான முயற்சி இடம்பெறாது என்றே தோன்றுகின்றது'- என்றார். (ம-44)

# சுற்றுலாவிகள் ரயில்சேவை

கொழும்பு, மார்ச் 28

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஏப்ரல் 5ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை இந்த ரயில் சேவை இடம்பெறும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

# அரசியல் உறுதித்தன்மைக்கு பொதுத்தேர்தலே அவசியமாம்

## பெரமுன சுட்டிக்காட்டு

நாட்டில் அரசியல் நிலைமை நன்மை பயக்கும் வகையில் அமைய வேண்டுமாயின் பொதுத்தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்று ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

# ஐ.தே.க. அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 28

கடவத்தைப் பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் காரணமாக இந்த வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-இ)

# வேட்பாளராகக் களமிறங்க பெரமுனவில் ஐவர் தயார்

கொழும்பு, மார்ச் 28

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனக் கட்சியிலிருந்து வேட்பாளராகக் களமிறங்குவதற்கு 5 வேட்பாளர்கள் வரை தயார் நிலையிலுள்ளனர் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் பொதுவேட்பாளரை முன்னிறுத்த நாம் தயாராக இருக்கிறோம். ஆனால் அந்த வேட்பாளர் யார் என்பதை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

29.03.2024

**வெள்ளிக்கிழமை**

**பங்குனி–16**

சுபநேரம் : 06.13 -07.43

ராகுகாலம் : 10.43 - 12.13

**நாளொரு நல்வார்த்தை**

**உன்னால் செய்ய முடியாததை,**
**கடைப்பிடிக்க முடியாததை**
**மற்றவனிடம் எதிர்பார்க்காதே**

**–சே குவேரா–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விஅறிவித்தல்
# கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
# சபைநிதி 2024

01. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது. சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர். கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு. தொலைபேசி:-024-3243542 தொலைநகல்: 0212290001இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 28.03.2024ம் திகதியிலிருந்து 17.04.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 28.03.2024ம் திகதியிலிருந்து 17.04.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் மாலை 02.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 18.04.2024ம் திகதி மாலை 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 49(நாற்பத்தொன்பது - 05.06.2024) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/01/2024 | முள்ளிவாய்க்கால் கிழக்கு கன்னிகா குழு மாற்றுத்திறனாளிகள் வீதி (கொங்கிறிற்) | 1.694 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 17000.00 | 03.07.2024 |
| 2 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/02/2024 | முள்ளிவாய்க்கால் மேற்கு பனையடி முருகன் கோவில் இணைப்பு வீதி (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 3 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/03/2024 | வற்றாப்பளை 3ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 4 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/04/2024 | நீராவிப்பிட்டி கிழக்கு பாடசாலை வீதி புனரமைப்பு (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 5 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/05/2024 | முள்ளியவளை மேற்கு நாவற்காடு இந்து மயானவீதி புனரமைப்பு (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 6 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/06/2024 | முள்ளியவளை கிழக்கு இந்து மயானவீதி புனரமைப்பு (தார்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 7 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/07/2024 | தண்ணீரூற்று மேற்கு முல்லை கல்விநிலைய முன் வீதி புனரமைப்பு (தார்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 8 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/09/2024 | கள்ளப்பாடு தெற்கு மாடசாமி கோவில் வீதி புனரமைப்பு (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 9 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/10/2024 | செம்மலை 1ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு, கரிக்கட்டுமூலை கிழக்கு (தார்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 10 | NP/14/44(1)/02/03/ C.F/Capital/11/2024 | குமுழமுனை பூங்காவனம் வீதி புனரமைப்பு (கொங்கிறிற்) | 1.186 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 12000.00 | 03.07.2024 |
| 11 | NP/14/44(1)/02/03/ DEV.RE/Capital/03/ 2023/2024 | புளியங்குள வீதி புனரமைப்பு (தார், கொங்கிறிற்) | 1.694 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 17000.00 | 03.07.2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 05.04.2024 ஆம் திகதி பி.ப 10.00 மணிக்கு **கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு** அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை,**
**முல்லைத்தீவு.**

**28.03.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மை போட்டி

யாழ்., மார்ச் 28

புத்தூர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.கமலதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீமுருகதாஸ் காந்தன் பங்கேற்கவுள்ளார். (ச)

## தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு

யாழ்., மார்ச் 28

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததின நிகழ்வு, யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவரான நா.வேதநாயகன் தலைமையில் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவரான இ.பேரின்பநாயகத்தின் தொடக்கவுரை ஆற்றுகையும், கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையிலான சொற்சமரும் இடம்பெறவுள்ளதாகச் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் • 19 • 09 • 1963

மறைவு • 25 • 03 • 2024

## செல்வநாயகம் ஜெயக்குமார்

நல்லூர் சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் செல்வநாயகம் அவர்கள் கடந்த (25.03.2024) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை - செல்வநாயகம், அன்னபூரணம் - செல்வநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் தேவகியின் அன்புக் கணவரும், நிலக்ஷனாவின் அன்புத் தந்தையும், சிறீந்திரன் செல்வநாயகம் (லண்டன்), காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் ரங்கமலர் தம்பதியரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்ற செல்லச்சாமி மற்றும் புவனேஸ்வரி செல்லச்சாமி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரா சிறீந்திரன் (லண்டன்), சிவகுருநாதன். கேதீசன் (கனடா), ரமேசன் (கனடா), காலஞ்சென்றவர்களான கோணேசன் (அருணா), தணிகேசன் (பேபி அருணா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், றோகினி (கனடா), பகவதி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும், Dr.சுகன் சிறீந்திரன் (லண்டன்), கஜன் சிறீந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், Dr.அபிராசுகன் (லண்டன்), அபிராம் (கனடா), அஸ்வின் (கனடா), அபிசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறியன் சுகன் (லண்டன்), அஸ்ரியா சுகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தேவகி (மனைவி) -077 652 2980**
**நிலக்ஷனா (மகள்) - 076 333 8781**
**சிறீந்திரன் (அண்ணா) - +44 740 407 7372**
**இந்திரா (மைத்துனி) - +44 740 540 4632**
**கேதா (மைத்துனன்) - 001 416 949 1968**
**ரமேஸ் (மைத்துனன்) - 001 519 781 5413**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 41985) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், ஏழாலை.**

வட்டாரம் - 03, புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் வீதி, ஆதன இல 140/1

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட புளியங்கிணற்றடி வீதி ஏழாலை தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் **வட்டாரம் - 03, புளியங்கிணற்றடி புன்னாலைக் கட்டுவன் வீதி, ஆதன இல: 140/1ல் Mr.S.அந்தோனிப்பிள்ளை** எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு NMX சொர்ணபாலா முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை தெற்கு கிராமம். வலிகாமம் வடக்கு பிரதேசசெயலர் பிரிவு. J/203 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"புளியடி கலட்டி"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 5 குழி 6.19 உடைய ஆதனமானது 2000.01.30 ஆம் திகதிய 8771 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக.**

- **கிழக்கு** - பிரதான வீதி
- **வடக்கு** - பிரதான வீதி
- **மேற்கு** - G.திவ்யதேவியின் ஆதனம்
- **தெற்கு** - G.திவ்யதேவியின் ஆதனமும் ஒழுங்கையும்

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் B. பிரணவன் அவர்களால் 2023.03.18 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1424 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 5 குழி 6.19 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு NMX சொர்ணபாலா அவர்கள் மூலம் 2000.01.30 ஆம் திகதிய 8771 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியால். புளியங்கிணற்றடி புன்னாலைக் கட்டுவன் வீதி ஏழாலை தெற்கு சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த ஆனந்தராஜா றெஜி யோகேந்திரன் (197717000926) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது ஆனந்தராஜா றெஜி யோகேந்திரன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

## வேலையாள்கள் தேவை

கொக்குவிலில்
இயங்கிவரும் பிரபல
அரிசியாலை ஒன்றிற்கு
கனரக சாரதி மற்றும்
வெல்டிங் தொழிலாளர்கள்
தேவை.

(CS/54549) J-1

தொடர்பு:- **076 096 9728**

## பொதுக்கூட்டம்

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் கிழக்கு, கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுச் சங்கத்தின் 15ஆவது வருடாந்த பொதுக்கூட்டம், கோப்பாய்ப் பிரதேச செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் முத்துச்சாமி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டபதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினராக கோப்பாய்ப் பிரதேச செயலர் சண்முகராசா சிவஸ்ரீ, கௌரவ விருந்தினர்களாக கோப்பாய்ப் பிரதேச செயலகக் கணக்காளர் ஆறுமுகம் கிரிதரன், கொழும்பு தாய்ச் சங்கத்தின் உபதலைவர் சோமசுந்தரம் சுப்பிரமணியம், யாழ். மாவட்டச் செயலர் சுப்பிரமணியம் கணேசலிங்கம், தரம்-1 ஓய்வூதிய உத்தியோகத்தர் மதியழகன் மல்லிகாதேவி, அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரதாபன் கார்த்திகா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ப)

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கனகரத்தினம்**
**சுரேஸ்குமார் (சுரேஸ்)**
(பணியாளர், புதுக்குடியிருப்பு ஆதாரவைத்தியசாலை)

பிறப்பு 16.08.1976 இறப்பு 28.03.2009

குடும்பத்தின் குலவிளக்காய் வந்துதித்து
- வாழ்க்கை
என்னும் பாதையில் பயணித்த என் குலவிளக்கு
நீங்கள் எனைவிட்டு பிரிந்து பதினைந்தாண்டு
கடந்தபோதும் உங்கள் முகம்
- காணத்தவிக்கின்றேன்.



**கந்தையா**
**ஜெயக்குமார் (ஜெயம்)**

பிறப்பு 17.05.1984 இறப்பு 13.03.2009

கலையாத நினைவுகளுடன் காலன்
- உன்னை
அழைத்து பதினைந்தாண்டு
- கடந்தாலும்
என்றும் ஈரவிழி காயவில்லை.....

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி சு. பரிமளம் (மதி) | அப்பா, அம்மா, சகோதரங்கள்
தாவளை, இயற்றாளை, வரணி.

## மூன்றாம் ஆண்டு நினைவுப்பிரார்த்தனையும் இசை அர்ச்சனையும்



கலைப்பிரவாகம், கலாபூஷணம், சங்கீதபூஷணம்
**அமரர் சுப்பையா கணபதிப்பிள்ளை**
**(ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் - அழகியல்)**

"லயஞான மணிரங்கன் கணபதிப்பிள்ளையின்
தயவினால் சங்கீதம் பூத்தது - நயமேவும்
பங்குனி பேறாகும் சதுர்த்தி நன்னாளில்
சங்கமித்தார் சிவன் தாள்"

முதுபெரும் இசைக்கலைஞர் அமரர் சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்களின் மூன்றாம் வருட நினைவுப்பிரார்த்தனை நாளில் இடம்பெறவுள்ள இசை அர்ச்சனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

**காலம்: 29.03.2024 வெள்ளி மு.ப 10 மணி**
**இடம் : தொல்புரம் வழக்கம்பரை அம்மன் திருமண மண்டபம்**

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்
இசைக்கலைஞர்கள் மற்றும் குடும்பத்தினர்

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**
**28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை**

## ஆடைகளின் சாம்ராஜ்யம்
## இந்தியன் செலக்ஷனின்
சித்திரைப் புத்தாண்டு
## ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,
சேட், ரீ சேட், பாட்டி புரொக், லெஹங்கா
மற்றும் ஏராளமான ஆடைத்
தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே
முந்திக்கொள்ளுங்கள்

**விசேட விலைக் கழிவு**

ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
**500/=**

**இன்று 28.03.2024 முதல்**
**சித்திரைப் புத்தாண்டு வரை**
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

## இந்தியன் செலக்ஷன்

இடம்: வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

நானே ஆரம்பம்
வெல்வோம் ஸ்ரீலங்கா
SMART சூரன்களோடு

# பிள்ளைகள் நாட்டின் எதிர்காலம்



வெளிநாட்டு மனித வலு பங்களிப்புக்கு தமது கௌரவத்தை வழங்கிய அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உறுதுணையாகக் கடமைப்படுவோம்

## நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை வவுனியாவில்

மார்ச் 29-30 மு.ப. 9.30 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை

## வவுனியா காமினி மகா வித்தியால மைதானத்தில்

வெளிநாடுகளில் வேலை தேடும் உங்களுக்கும்...

- அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
- பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
- பாடசாலைகளுக்கு 'Smart Board'
- சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள ஜயகமு ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.

வெளிநாட்டு வேலைகளால் சம்பாதிக்கும் பணத்தை வங்கிகள் ஊடாக மட்டும் அனுப்புங்கள்...
மேலதிக பல நன்மைகளைப் பெற்றிடுங்கள்.
**மேலதிக விபரங்களுக்கு 1989 க்கு அழைக்கவும்.**
www.slbfe.lk

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
*அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

மீசாலை, மார்ச் 28

அல்லாரை, பண்டாரிதறைப் பிள்ளையார் கோவிலுக்குப் புதிதாக அமைக்கப்பெற்ற புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-9)

## பொதுச்சபைக்கூட்டம்

வவுனியா பொது மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் பொதுச்சபைக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருத்துவமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-இ)

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி சிற்றுண்டிச்சாலை கேள்வி மனு கோரல் - 2024

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி சிற்றுண்டிச்சாலை 2024 ஆண்டு மே மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கு பொருத்தமான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றன. இடைநிலைப்பிரிவு உயர்தரப் பிரிவு ஆகிய இரண்டு பகுதிகளிலும் தலா ஒரு சிற்றுண்டிச்சாலை வீதம் இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் அமைந்துள்ளன. கேள்வி கோரலின் போது தனித்தனியே இரண்டு சிற்றுண்டிச் சாலைக்கும் வெவ்வேறாக கேள்வி மனு சமர்ப்பித்தல் வேண்டும்.


கேள்வி மனுகோரலின் போது ஒரு விண்ணப்பப்படிவத்துக்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூ.500 (அரசவரி உட்பட). பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 29.03.2024 தொடக்கம் மு.ப 9மணி பி.ப 2.00 மணி வரை உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று. 10.04.2024 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ **தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி என்னும் முகவரிக்கு சேர்த்தல் வேண்டும்.** கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **சிற்றுண்டிச்சாலையை நிர்வகிப்பதற்கான** கேள்வி கோரல் 2024 எனக் குறிப்பிடல் வேண்டும்.

ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரரிடமிருந்து கேள்வி கோரல் மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(cr.41995) (N.1)

## 9வது ஆண்டு நீங்காத நினைவில்



மண்ணில் 22.09.1944

விண்ணில் 08.04.2015

**கலாபூஷணம், கலாவாரிதி, இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை**

**திதி: 28.03.2024**

என் தாயை இவ் உலகிற்கு கொண்டு வந்த என் தாத்தாவிற்காக சில வரிகள்...

உங்கள் வரிகளிற்கு ஈடாகாது இந்த சின்னவளின் வரிகள் இருந்தாலும் உங்களைப் பற்றி எழுத ஆசையாக இருக்கிறது. இருந்தும் என்ன பயன்
அவற்றை பார்ப்பதற்கு தானே நீங்கள் எங்கள் அருகில் இல்லை
ஆயிரம் நாடகங்கள் பார்த்தாலும் உங்கள் நடிப்பிற்கு ஈடாகாது. ஓராயிரம் பாடல்கள் கேட்டாலும் உங்கள் குரலால் கேட்கும் அந்தப் பாட்டிற்கு ஈடாகாது. அதே நேரம் அந்த பாட்டை கேட்டபடி உங்கள் மடியில் படுத்த அந்த கணமும் மறந்து போகாது. எனக்கு உயிர் தந்தவளுக்கு
உயிராக நீங்கள் இருந்தீர்கள் நான் இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு இப்போது அவள் அழும் கண்ணீரை துடைக்கக் கூட நீங்கள் அருகில் இல்லை
நாடு கடந்து சென்றாலும் பரவாயில்லை ஆனால் நீங்கள் இந்த உலகத்தை விட்டே சென்று விட்டீர்கள்
உரிமை கொள்ள ஆயிரம் உறவு இருந்தாலும் உங்களைப் போல யாரும் இல்லை காலம் அது கடந்து சென்றாலும் என்றும் மாறாத நினைவுகள் எங்களுடன்
9 ஆண்டுகள் கழிந்தாலும் அன்றும் இன்றும் என்றும் உங்கள் நினைவுகளுடன்
பேர்த்தி அபிராமி

நீங்கள் ஒருபோதும் எங்களை விட்டுச் சென்றுவிட மாட்டீர்கள் என்று உறுதியளித்தீர்கள் அப்பப்பா
ஆனால் திடீரென்று ஒருநாள் எங்களுக்கு எதுவுமே சொல்லாமல் சொர்க்க தேசத்திற்கு சென்று விட்டீர்கள்
இப்போதும் நாங்கள் அடிக்கடி உங்களை எங்கள் அருகில் கற்பனை செய்கின்றோம் நீங்கள் எல்லோருக்கும் சிறந்தவர் என்பதை அறிந்திருந்தோம். நீங்கள் மீண்டும் எங்களுக்கு கிடைக்கவேண்டும் என்று பலமுறை பிரார்த்தனை செய்தோம். அடிக்கடி உங்கள் பெயரைச் சொல்லி அழைக்கின்றோம்.
நாங்கள் உங்களை எத்தனை தடவை அழைத்தாலும், நீங்கள் எங்களுக்கு பதில் அளிப்பதில்லை.
ஆனாலும் நீங்கள் இங்கே எங்கள் குரலைக் கேட்கின்றீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.
நீங்கள் எங்கே இருந்தாலும் நாங்கள் எப்போதும் உங்களை மறக்கமாட்டோம் அப்பப்பா
நீங்கள் எப்போதும் எங்கள் இதயங்களில் இருப்பீர்கள் அப்பப்பா
பேர்த்தி விவேகா (பிரான்ஸ்)

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

உங்கள் பிரிவால் துயருறும்,
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(CS 28361) S-1

## மரண அறிவித்தல்



**திருமதி கனகசபை திருக்கேதீஸ்வரி**

திருமதி கனகசபை திருக்கேதீஸ்வரி அவர்கள் 27.03.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் தங்கமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சண்முகம் தெய்வானைப் பிள்ளையின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபையின் பாசமிகு துணைவியாரும். வாசுகி, வாசுதேவன் (மொழிபெயர்ப்பாளர்-பிரான்ஸ்), காலஞ்சென்ற வசந்தி (தலைமை CDO- திருகோணமலை). வாகீஸ்வரி. வாசவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற இரவீந்திரன். மரி ஆந்திராய் (பிரான்ஸ்). ஜெயராஜ். மோகனகுமார் (ராசன்). அஜந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும். மதுரன் (white box studio), வாகீசன் (IBC Tamil). ஆதவன்-வேலன் (பிரான்ஸ்). யதுகுலன் (Software Engineer- இந்தியா), மாதுரி (Samugam media). மாதங்கி. வித்தன்-விந்தகன்-விசாலி (பிரான்ஸ்). ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் காலஞ்சென்ற தர்மலிங்கம் காலஞ்சென்ற காமாச்சி. செல்லமுத்து (லண்டன்). காலஞ்சென்ற ஆறுமுகம். காலஞ்சென்ற கனகம்மா. செல்லம்மா காலஞ்சென்ற சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசலிங்கம் (கனடா) காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.03.2024) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடலானது சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 28362) V-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 26 . 03 . 1971



ஆண்டவன் அடியில் 26 . 03 . 2024

**திருமதி தாரணி சுதாதரன்**

வட்டுக்கோட்டை மூளாய் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாரணி சுதாதரன் 26.03.2024 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் வசந்தாதேவி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைஐயா- கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும். காலஞ்சென்ற துரைஐயா சுதாகரன் (G.S) அவர்களின் அன்பு மனைவியும். பிரணவசுதன் (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்களின் பாசத்திற்குரிய அன்புத் தாயாரும். தி.தர்சினி (U.K) அவர்களின் அன்புச் சகோதரியும், திருக்கேதீஸ்வரன் (UK) அவர்களின் பாசமிகு மைத்துனியும், பிரியன் (U.K) அவர்களின் அன்பு பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (இன்று) 28.03.2024 வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு/ வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**மூளாய் வீதி**
**வட்டுக்கோட்டை.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**021 225 2098**

(CS 41996) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாயிகளுக்கு மின்கட்டணத்தில் சலுகை

## விவசாய அமைச்சர் நடவடிக்கை

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகளின் மின்கட்டணத் தைக் குறைப்பதற் கான அமைச் சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். விவசாயம் தொடர்பில் வடபகுதி விவசாயிகளின் அர்ப்பணிப்பைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 30 வருடகால போரால் வடபகுதி மக்கள் பெரும் நெருக்கடிகளை அனுபவித்தபோதும் அவர்கள் விவசாயத்தைக் கைவிடவில்லை. மின்கட்டண நிவாரணங் களைக் கோரியுள்ளனர். அதனடிப்படையில் அவர்களின் மின் கட்டணங்களைக்குறைப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று அமைச் சர் மேலும் தெரிவித்தார். (ச-6)

## வடக்கில்...

துள்ளார். "எமது நாட்டில் வடக்கில் மீண்டு மொருமுறை போர் ஏற்படவே ஏற்படாது. வடக்கில் உள்ள பெற்றோர், போருக்காகவே பிள்ளைகளை வளர்க்கின்றனர் என்ற மாயையை தெற்கில் தோற்றுவிக்க முற்படுகின்றனர். அதற்காகவே புலிகள் மீண்டெழுவார்கள் என்றெல்லாம் கூறப்படுகின்றது. ஆனால் அவ்வாறு நடக்காது. வடக்கில் உள்ள பெற்றோர் தமது பிள்ளைகளைப் போருக்கு அனுப்ப முற்படவில்லை. தெற்கில் உள்ள பெற்றோர் போலவே கல்வி வழங்கவும், சிறந்த தொழிலைப் பெற்றுக்கொடுக்கவும், சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கவுமே எதிர்பார்க்கின்றனர். அதற்கான கதவு மூடப்பட்டுள்ளது. தெற்கைப் போலவே வடக்கிலும் பிரச்சினைகள் உள்ளன. 30 வருடகாலப் போரால் வடக்குக்கான நிறைய வாய்ப்புகள் இல்லாமற்போயுள்ளன. அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த துரிதமான அபிவிருத்தி வேலைத்திட்டம் அவசியம். ஏனெனில் 30 வருடங்கள் இழக்கப்பட்டுள்ளன" என்றும் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-எ-44)

## மைத்திரியை...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது நாட்டில் புரட்சிகரமான அரசியலை முன்னெடுத்த கட்சியாகும். கிராமத்தில் பிறந்தவர்களுக்குக்கூட வாய்ப்பளித்த கட்சியாகும். இப்படிப்பட்ட கட்சியானது மைத்திரியின் தலைமைத்துவத்தின்கீழ் சீரழிந்துள்ளது. மைத்திரிபால சிறிசேனவை விரட்டவேண்டும் என்று கட்சி ஆதரவாளர்களிடம், உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இதுவரை அவர் இழைத்துள்ள தவறுகளே போதுமானவை. அவருக்கு மூளையில் பிரச்சினை இருப்பதையே அவரின் அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றன. அரபு நாடாக இருந்திருந்தால் அவர் கல் வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-44)

## இளைப்பாறிய...

இவர் விவசாய வேலைகளை முடித்துவிட்டு பலாலி வீதியோரமாக லான்ட் மாஸ்ரரில் இளைப்பாறிக் கொண்டிருந்தபோது, கட்டுப்பாடற்று வந்த கனரக வாகனம் ஒன்று மோதியுள்ளது. கனரக வாகனம் லான்ட் மாஸ்ரரை மோதி, அங்கிருந்த தொலைபேசிக் கம்பம் மற்றும் தேக்குமரம் என்பவற்றையும் மோதியது. லான்ட் மாஸ்ரரின் இயந்திரப் பகுதி தவிர்ந்த ஏனையவை சுக்குநூறாகின. கனரக வாகனமும் கடும் சேதங்களுக்கு உள்ளாகியது.

விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு அவர் உயிரிழந்தார்.

கனரக வாகனத்தைச் செலுத்தி வந்தவர் சில தினங்களுக்கு முன்னர் நீர்வேலியைச் சேர்ந்தவரிடம் ஒரு இலட்சம் ரூபா முற்பணம் செலுத்தி வாகனத்தைக் கொள்வனவு செய்தார் என்றும், அதற்காகநண்பர்களுக்கு விருந்தளித்துவிட்டு வந்தபோதே விபத்து நடந்துள்ளது எனவும் கூறப்படுகின்றது. விபத்து நடந்த போது கனரக வாகனத்துக்குள் சிலர் இருந்தனர் என்றும், விபத்தின் பின்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர் என்றும் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சுன்னாகம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-66-26)

## இந்தியாவுக்குப்...

நேற்று இந்தியா சென்ற ஜனாதிபதிச் செயலகத்தின் தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தலைமையிலான குழு, இந்திய அரசின் உயர் மட்ட அதிகாரிகளுடன் இன்று இது தொடர்பான பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பில் பல ஆண்டுகளாகப் பேசப்பட்டுவந்தபோதும், 2015ஆம் ஆண்டு உத்தியோக பூர்வ பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டு பிரதமராக பொறுப்பேற்றிருந்த ரணில் விக்ரமசிங்க, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டபோது, இந்தியப் பிரதமர் மோடியிடம் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார். கடந்த ஆண்டு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபின்னர் இந்தியா சென்றபோதும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இது தொடர்பாக அவர் கலந்துரையாடியிருந்தார்.

இந்நிலையில் இந்தத்திட்டம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-எ-இ)

## 3 ஆயிரம்...

இலங்கையர்கள் மொஸ்கோவின் பணத்துக்காக உயிரைப் பணயம் வைக்கத் தயாராக உள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் ரஷ்யப் படைகளில் சேர ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும் 'அல்ஜெசீரா' கூறுகின்றது.

உக்ரைன் தரப்பில் குறைந்தளவான இலங்கையர்களே ஆயுதமேந்தியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள 'அல்ஜெசீரா', நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் பணத்துக்காக ரஷ்யா சார்பாக ஆயுதமேந்தியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கையர்கள் ரஷ்யாவால் மாதாந்தம் வழங்கப்படும் 3 ஆயிரம் டொலருக்காகவும், குடியுரிமையை எதிர்பார்த்தும் ஆயுதமேந்திப் போராடுகின்றனர் என்று 'அல்ஜெசீரா' குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், உக்ரைன் தரப்பில் ஆயுதமேந்திய இரு இலங்கையர்கள் போரில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், தற்போது ஒற்றை இலக்கத்திலேயே உக்ரைன் தரப்பில் இலங்கையர்கள் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-இ)

## பஸிலின்...

ஒப்படைக்கப்பட்டுள்ளது. நேற்று கொழும்பில் உள்ள மஹிந்த ராஜபக்சவின் இல்லத்தில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் கட்சியின் தேசிய அமைப்பாளராக பஸில் ராஜபக்ச செயற்பட்டிருந்தநிலையில் கடந்த ஆண்டு இறுதியில் நடந்த கட்சியின் தேசிய மாநாட்டின் பின்னர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதன்பின்னர் தேசிய அமைப்பாளர் பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை. அந்தப் பதவிக்கு தற்போது நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளர் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார் என்று இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## மருத்துவர்...

முல்லைத்தீவில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மருத்துவ அதிகாரியின் வாகனத்தை, எதிரே வந்த டிப்பர் ஒன்று மோதியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த மருத்துவ அதிகாரி வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இந்த விபத்தில் முச்சக்கரவண்டி ஒன்றும் சேதமடைந்துள்ளது. வாகனத்தை முந்திச் செல்ல முயன்றபோதே விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## மசாஜ்...

திடீர் சோதனையில், அங்கு பணிபுரிந்த 137 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் இருவருக்கு எய்ட்ஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 15 வயதுச் சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

கைது செய்யப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-இ)

## மைத்திரிக்கு...

வித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் வாக்குமூலத்தைப் பரிசீலித்த பின்னர் சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. விரைவில் மைத்திரி நீதிமன்றில் முற்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-6)

## வடக்குப்...

பாதுகாக்கப்படவேண்டும் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கனடாவுக்குச் சென்றுள்ள அநுரகுமார திஸாநாயக்க அங்குள்ள இலங்கை மக்களுடன் சந்திப்புகளை நடத்திவருகின்றார். அந்தச் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், 13 பிளஸ் என்றெல்லாம் பேசப்படுகின்றது. மாகாணசபை முறைமை இதற்குத் தீர்வு அல்ல என்றே நாம் கருதுகின்றோம். எனினும், மாகாணசபை முறைமை தற்போது அம்மக்களின் (தமிழ் மக்களின்) உரிமை. எனவே, அதை தற்போது இல்லாது செய்யமுடியாது. அப்படியானால் தற்போது என்ன செய்ய வேண்டும்?

மாகாணசபை முறைமை தமது அரசியல் உரிமையென அம்மக்கள் (தமிழ் மக்கள்) ஏற்கின்றனர் எனில், அதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து அதை அம்மக்களின் உரிமையாக உறுதிப்படுத்தவேண்டும். நாம் அதைச்செய்வோம். இந்த முறைமை தீர்வா, இல்லையா என்பதை எதிர்காலம் தீர்மானிக்கும். தமது அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படும் வியூகம் மாகாணசபை முறைமையென மக்கள் கருதினால் அதனை நாம் பாதுகாக்கவேண்டும். அரசியல் பிரச்சினை மற்றும் மக்கள் பிரச்சினைகள் என இரண்டுக்கும் தீர்வுகள் அவசியம். வடக்குக்குச் சென்றாலும், தெற்கில் இருந்தாலும் இதையே நாம் கூறிவருகின்றோம். வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தத் தயார்" என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (அ-எ-44)

## முன்னாள்...

செயற்படுகின்றார். 'பேஸ்புக்' பதிவு ஒன்று தொடர்பான விசாரணைக்காக கொழும்பில் உள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு இவர் கடந்தவாரம் அழைக்கப்பட்டிருந்தார். அன்றையதினம் அவர் அங்கு செல்லாத நிலையில், மீண்டும் நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுக்கு அவர் நேற்றுச்சென்றிருந்தபோது, விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

அவரை கொழும்பு நீதிமன்றில் இன்று முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் அடிக்கடி தடைப்படும் மின்சாரம்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

நயினாதீவில் கடந்த இரு நாள்களாக எவ்வித முன்னறிவித்தலுமின்றி அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் குறித்த பகுதியில் வாழும் பொது மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளதுடன் இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட மின்சார சபையின் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர். (ப-66)

# இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அனுசரணையில், இலவச பொதுமருத்துவ முகாம் ஓடக்கரை வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள வேலும்மயிலும் அறக்கட்டளை அலுவலக வளாகத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

வேலும்மயிலும் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மருத்துவ முகாமில் இலவசமாக மருத்துவப் பரிசோதனைகளும் மருத்துவ ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படவுள் ளன. (ம-100)

## தவறவிடப்பட்டுள்ளது

வவுனியாவிற்கும் தாண்டிக்குளத்திற்கும் இடையில் மோதிரம் ஒன்று 23.03.2024 அன்று தவறவிடப்பட்டுள்ளது. எடுத்துத் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 754 8424

(CS/54550) J-1


## மணப்பெண் தேவை

1. திருகோணமலை. இந்து. கௌரவ குடும்பம் (V). 1993. பூராடம். BSc Engineering, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை
2. கொக்குவில். இந்து. கௌரவ குடும்பம் (V) 1985. ரோகினி. Business man, Canada, divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
3. கரவெட்டி-புங்குடுதீவு. இந்து. கௌரவ குடும்பம் (V). 1986. பூரட்டாதி. Graduate, UK மணமகனுக்கு மணமகள் தேவை
4. கந்தர்மடம். இந்து கௌரவ குடும்பம் (V) 1989 உத்தராடம். MSc Canada மணமகனுக்கு மணமகள் தேவை
5. தெல்லிப்பளை. இந்து. கௌரவ குடும்பம் (V). 1988. உத்தரம். BSc civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை
6. முல்லைத்தீவு. இந்து. கௌரவ குடும்பம் (V). 1985. உத்தரம். Graduate, Denmark மணமகனுக்கு மணமகள் தேவை.
7. சுருவில். இந்து. கௌரவ குடும்பம் (V). 1987. அச்சுவினி. MSc, **Australia** மணமகனுக்கு மணமகள் தேவை
8. பளை. இந்து. கௌரவகுடும்பம் (V). 1984. அவிட்டம். PHD, Divorce UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

www.thaalee.com Phone : 077 5393728 whatsap : 077 803 8193

(CS 28360) V-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 11 . 1927

மறைவு 27 . 03 . 2024

## அமரர் கந்தையா நவரத்தினம்

நல்லூர் முத்திரைச் சந்தியை பிறப்பிடமாகவும் இல 45, மணிக்கூட்டு வீதி பெருமாள் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட உத்தரவு பெற்ற மொழிபெயர்ப்பாளரும் தட்டெழுத்தாளருமான கந்தையா நவரத்தினம் நேற்று (27.03.2024) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம்-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் மகாலிங்கம், திலகவதி, மகேஸ்வரி மற்றும் விமலாவதி (நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலம் சென்றவர்களான விக்னேஸ்வரன், விக்னராஜன் (சூட்) மற்றும் நந்தினி (பிரான்ஸ்), விஜிதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்சுதன், வத்சலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் எழில்நிலா, அருண்நிலா-ஈழக்குமரன், கவிநயா, தருணன் ஆகியோரின் அன்புப் பேரனும் எழிலனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு இன்று (28.03.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்.

இல.45 மணிக்கூட்டு கோபுர வீதி
பெருமாள் கோயிலடி
யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு:
கிரி (பேரன்) : 077 050 6023
ராஜன் (பெறாமகன்): 077 721 1319

(CS 28359) V-1

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 02 . 1937

மறைவு 11 . 07 . 2021

## அமரர் சுப்பர் வடிவேலு

அன்பின் திருவுருவே
எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டொன்று அல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 . 03 . 1947

மறைவு 09 . 04 . 2023

## அமரர் திருமதி வடிவேலு பாக்கியதேவி

திதி: 28.03.2024

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
077 707 6077

72/19 பிரம்படி லேன்,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.